பத்திரிக்கை செய்தி

பிறப்பு சான்றிதழில் பெயர் சேர்க்க ரூ.3,500/- லஞ்சம் கேட்டு வாங்கிய இளநிலை உதவியாளர் கைது

புகார்தாரர் திரு.வெங்கடாசலம், கோட்ரபட்டி கிராமம், சந்தம்பட்டி அஞ்சல், அரூர் தாலுக்கா, தருமபுரி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் உறவினரின் ஆதார் அட்டையில் பிறந்த தேதி தவறுதலாக குறிப்பிட்டிருந்த காரணத்தினால் இசேவை மையத்தை அணுகியுள்ளார். இசேவை மையத்தில் பிறப்பு சான்றிதல் இருந்தால்தான் பிறந்த தேதியை மாற்ற முடியும் என கூறியுள்ளனர். எனவே புகார்தாரர் ஊத்தங்கரை சார்பதிவாளர் அலுவலகத்தை அணுகி தன்னுடைய உறவினரின் பிறப்பு சான்றிதலை சரிபார்த்தபோது, பிறப்பு சான்றிதலில் உறவினரின் பெயர் இல்லாமல் இருந்தது. எனவே பிறப்பு சான்றிதலில் பெயர் சேர்ப்பதற்காக கடந்த 25.07.2025ம் தேதி இசேவை மையத்தில் இணையவழி மூலமாக விண்ணப்பித்திருந்தார். விண்ணபத்தினை பரிசீலனை செய்து மேல் நடவடிக்கை எடுக்க திரு.ஜெய்கணேஷ், இளநிலை உதவியாளர், ஊத்தங்கரை தாலுக்கா அலுவலகம், கிருஷ்ணகிரி மாவட்டம் அவர்கள் தனக்கு ரூ.4,500/- லஞ்சமாக தர வேண்டும் என வற்புறுத்தியுள்ளார், பின்னர் லஞ்ச பணத்தை ரூ.3,500/- குறைத்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை கிருஷ்ணகிரி மாவட்ட பிரிவில் அளித்த புகாரின் பேரில் இன்று 31.07.2025, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மேற்படி பொறிவைப்பு நடவடிக்கையின் போது திரு.ஜெய்கணேஷ், இளநிலை உதவியாளர், லஞ்ச பணம் ரூ.3,500/-யை புகார்தாரரிடமிருந்து பெற்றபோது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.